முருகப்பெருமான் துணை

# மகான் பொய்கை ஆழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

09.06.2021, புதன்கிழமை

1. மாதவராசனே ஆறுமுக அரங்கனே
மக்களை காத்தருள வேண்டி
பூதலத்தில் அவதாரம் புரிந்தநல்
புண்ணியனே உன்பெருமை கூறி
2. கூறியே யோக பிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ விடை திங்கள்
இருபானாற் திகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 26ம் நாள், 09.06.2021 புதன்கிழமை)
இயம்பிடுவோம் நாயன்மார்களை தொடர்ந்து
3. தொடர்ந்து ஆழ்வார்களுள் இனிதே
தெரிவிப்பேன் பொய்கை ஆழ்வாரும்
இடரில்லா ஞான உலகம் அமைய உரைப்பேன்
இறைசக்தியாக அருளி வருகின்ற ஞானி
4. ஞானியரின் உண்மை நெறியை
நம்பிக்கை கொண்டு உலகோர்
ஞானியாகும் வாய்ப்பாக கருதி
நல்கியே பிரணவக் குடிலில்
5. குடிலில் தஞ்சம் அடைந்து
குருவாக தேசிகனை ஏற்று
இடர்போக்கும் திருவடி தீட்சை
இனிதே ஏற்று உலக மக்கள்
6. மக்கள் அரங்கஞானி காட்டும்
மாதவ வழி முறைகள் தன்னை
தேக்கமின்றி பின்பற்றி அனுதினமும்
தொடர் பூசை செய்து கொண்டு
7. கொண்டுமே நீதி வழிகாட்டும்
குருபரன் மேலான வழிபாட்டுடன்
தொண்டதனை தரும வழியில்
தொடர்ந்து மக்கள் செய்துமே
8. செய்துமே ஞானிகள் ஆசிபட
சீடர்களாகி கலியில் தொடர
மெய்ஞான நிலை அடைந்து
மேலான அறிவும் தெளிவும் கூடி
9. கூடியே உலகியல் வாழ்வில்
குறைகளான செயல்முறை களைந்து
நாடியே தான தரும பலமோடு
ஞாலமதில் மக்கள் தொடர

10. தொடரவே கலியின் துன்பங்கள்
தொலைந்தோடி நல்ல பாதுகாப்பும்
இடரின்றி உலகே அமைதிபெறும்
இந்த உலகம் ஞானிகள் சூழ்ந்த

11. சூழ்ந்த ஞான பூமியாகி
சுப்பிரமண்யர் ஆளுமை கொண்ட
வேல் காக்கும் ஞானஆட்சியாகும்
விளம்பிய யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–